833
833 / 2-58

REGISTERED No. M. 6165. ந. பை. 13

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 MAY 1958
MADRAS

மாத பத்திரி

ஜூன்—1958

விஷயம். பக்கம்.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருவேதம் 1
தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்
(ரஹ்மத் பாகவி) 9
யானையை வென்ற வேந்தன் (சிறுவர் பகுதி)
(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி) 15
தரீக்கத் என்னும் ஞான மார்க்கம் (ரஹ்மத் பாகவி) ... 19
சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது
துப்பு துலக்கிய தூயவர் 23
மாநிலம் மறக்க முடியாத மாவீரர் 29
... பெரும் தியாக மேதை 31

... இஸ்லாம் ஆபீஸ்:
... ஹரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
Q7ண211, N124 F1
N58.
187075

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா 0–13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

புதிய அச்சு ! வெளிவந்து விட்டது ! !

உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20-நாட்களுக்குள் **உர்தூ** பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

256-பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 3–00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்

ஜூன்—1958.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருவேதம்

உலகம் தோன்றிய காலம் தொட்டு, உலகில் மனிதர் உண்டான காலம் தொட்டு, உலக மக்களுக்கு வழி காட்டுவதற்காக, வழி காட்டிகள் தோன்றி, சகல மக்களுக்கும் நல்லுபதேசம் புரிந்து நல் வழி காட்டி வந்துள்ளார்கள்.

சர்வ லோக ரக்ஷகனாகிய அல்லாஹு தஆலா, ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு சமூகத்துக்கும் தன் புறத்திலிருந்து திருத் தூதர்களை அனுப்பி, உலக மக்களை சீர் திருத்தம் செய்து வந்துள்ளான். மாந்தர்களிடையே அப்போதைக் கப்போது, சத்தியத்தை எடுத்தோதி சன்மார்க்கப் போதனை செய்யும் மகான்கள் வந்திரா விட்டால், மனிதர்கள் மனிதப் பண்பாட்டை விட்டு, மிருகங்களினும் கேடாய் போயிருப்பார்கள்.

பண்டைக் காலத்திலே, இப்படி மத போதகர் விஜயம் சொற்ப காலம் இல்லாது போன நாடுகளில், மக்களிடையே அராஜகங்களும் அக்கிரமங்களும் அமர்க்களமும் எம் மட்டும் மல்கிப் போய், அனாசார அட்டூழியம் தாண்டவ மாடிக் கொண்டிருந்த தென்பதற்கு சரித்திரமே போதிய சான்றாகும்.

இன்றைக்கு 1400 வருஷங்களுக்கு முன், மத்திய பிரதேச நாடுகள் இப்படித்தான், அக்கிரமம் மலிந்து அனாசாரம் மலிந்து போனதாய் இருந்து வந்தன. அக்கால மனிதர்கள் ஒருவரை யொரு

வர் அடக்கி ஆள்வதில் அதிகம் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறே ஆத்மீகத் துறையிலும் மக்கள் மிக க்ஷீண தசையடைந்து போயிருந்தனர். மனப் பரிசுத்தத்துக்கும், நல்லொழுக்கத்துக்கும் தெய்வ பக்தி வேண்டுமென்பது உலகத்தார் எல்லோரும் ஒப்புக் கொள்ளும் விஷய மாகும். தெய்வ பக்தி வேண்டும் என்பதற்காக, ஒவ்வொருவரும் தத்தமக்கு இஷ்டப்பட்ட முறையிலெல்லாம் தெய்வத்தை சுயமே சிருஷ்டி செய்து கொள்வது முறையற்ற போக்காகும்.

தெய்வம் பல இருந்தால், வழி பாடும் பல இருக்கும்; வழி பாடு பல வகைப் பட்டிருந்தால், மக்களும் பல வகைப் பட்டிருப்பர். உலகில் பல வகையான மக்கள் இருந்தால் அவர்களுக் கிடையில் பல விதமான அபிப்பிராய பேதங்களும் பிணங்குகளும் இருக்கும். பிணங்குகள் மலிந்தால் சண்டையும் சச்சரவும் பூசலும்தான் மிகுந்து போகும். அப்புறம் உலகில் அமைதி ஏது? சமாதானம் ஏது? சாந்தி ஏது? சௌக்கியம் தான் ஏது?

இத்தியாதி காரணங் கொண்டே, பண்டைப் பெரியோர்களால், மகான்களால், தீர்க்க தரிசிகளால் "ஏக தெய்வக் கொள்கை" மிகச் சிறந்த தென்று அனுஷ்டிக்கப் பட்டு வந்துளது. மாந்தர் எல்லோரும் ஒரே தெய்வத்தை வணங்க வேண்டும், அந்தத் தெய்வத்தினிடமே தங்கள் கோரிக்கைகளை கேட்டுக் கொள்ள வேண்டும் என்று வழி முறை வகுத்துக் கொடுத்தார்கள்.

இன்றைக்கு 1400-வருஷங்களுக்கு முன், மாபெரும் மகானுகத் தோன்றிய எமது முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள், ஜனங்களை முதன்முதல் ஏக தெய்வ வணக்கத்தின் பக்கமும், சமுதாய ஒற்றுமையின் பக்கமுமே அழைத்து இதோபதேசம் புரியத் தொடங்கினர்கள்.

அக்காலத்தில் அரபு நாட்டார், குறிப்பாக மக்கா வாசிகள், பலப் பல தெய்வங்களை சிருஷ்டித்து வைத்துக் கொண்டு, பலப் பல விதமாக வணங்கித் தொழுது வந்தார்கள். இப்போது அல்லாஹ்வுக்காக மட்டும் வணக்கம் செலுத்தப்படும் கஃபத்துல்லாஹ் என்னும் மக்கா நகர்ப் பள்ளி வாசல், அக்காலத்தில் மகாப் பெரும் கோயிலாகவும், பலி பீடமாகவும் இருந்து வந்தது. அங்கு ஒன்று இரண்டல்ல;

சென்னை-600 008.

360 விக்கிரஹங்கள் இருந்து வந்தன. ஒவ்வொரு நாளும் ஒரு புது விக்கிரஹத்துக்கு ஆராதனையும் பூஜை புனஸ்காரமும் நடைபெற்று, தினமும் உத்ஸவம் கொண்டாடப்படும்.

ஆனால் இன்று அந்த மக்கா நகரின் மாபெரும் பள்ளி வாசலில், அல்லாஹ்வின் திரு நாமம் மட்டும் ஓதப் படுகிறது. ஒரே தெய்வத்துக்கு தினம் ஐங்காலமும் வணக்கம் செலுத்தப் படுகிறது. எல்லா மக்களும் அங்கு ஒரே மத்திய மூலஸ்தானத்தின் பக்கம் முகம் முன்னோக்கிக் கொண்டு தொழுவார்கள். அங்கு ஒரு உருவத் தோற்றமும் இராது; சிலையும் இராது; சின்னமும் இராது. எல்லாம் வல்ல ஏகபரம் பொருளான அல்லாஹு தஆலாவையே, எல்லோரும் வணங்குவதைக் காணலாம்.

இன்றைய உலக மக்களில் பெரும்பாலோர் ஏக தெய்வத்தையே விரும்புகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவர்களாயினும், ஹிந்துக்களாயினும், யூதர்களாயினும், மற்றெம் மதத்தினராயினும், தத்தம் மத அனுஷ்டானங்களை வெறுக்காமல் அனுசரித்து நடந்து கொள்வதோடு ஏக தெய்வ நம்பிக்கையிலேயே விசுவாசம் கொண்டும், மனதிலாவது வழி பாடு செய்தும் வருகிறார்கள்.

உலகில் பலவகை வேதங்கள் இருக்கின்றன. புராணங்கள் பல இருக்கின்றன; ஆகமங்கள் பல இருக்கின்றன. கட்டளைகள் பல இருக்கின்றன. ஆனால் அவைகளிலெல்லாம் ஏக தெய்வ வணக்கம் வற்புறுத்தப் பட்டில்லை. இந்தச் சிறப்பு, மனித சமுதாய மனைத்துக்கும் ஒரே மாதிரியாக, வாழ்க்கைக்கு வழி காட்டும் எம் திருமறையான குர்ஆன் ஷரீப் மட்டும் தான் 'தவ்ஹீத்' என்னும் ஏக தெய்வக் கொள்கையை வற்புறுத்திக் கூறுகிறது.

முஸ்லிம்கள் தம் பிள்ளைகளுக்கு முதன் முதல் கற்றுக் கொடுக்கும் திருக் கலிமாவில், ஏக தெய்வக் கொள்கையே வற்புறுத்திச் சொல்லப் படுகிறது. அதாவது "லா இலாஹ இல்லல்லாஹு" என்றும், "வஹ்தஹு லாஷரீக்க லஹு" என்றும் கற்றுக் கொடுக்கப் படுகிறது. "வணங்குதற்குரிய இறைவன், ஒரே அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு தெய்வம் இல்லை" என்றும் "அவன் தனித்தவன்; அவனுக்கு இணை துணை கிடையாது" என்றும் போதிக்கப் படுகிறது.

மக்களுக்கு வழி காட்டும் மகா தீபமான எமது திருக்குர்ஆன் வேதம், மற்றும் பல இடங்களில் 'தவ்ஹீது' என்னும் ஏக தெய்வக்

36

கொள்கையை வற்புறுத்திக் கூறியுள்ளது. "குல் ஹுவல்லாஹு அஹத்..." (அல்லாஹ் ஒரே தெய்வம் தான் என்று சொல்வீராக) என்று ஒவ்வொரு முஸ்லிமும் ஓதுகின்றார்.

ஏக தெய்வக் கொள்கைக்கு அடுத்தபடியாய், குர்ஆன் நமக்கு நற்சருமங்கள், நற்குணங்கள் பற்றி போதிக்கின்றது. எனவே ஒரு நன்மையான காரியம் செய்தால் அவனுக்கு அதைப் போல் பத்து மடங்கு புண்ணியம் தரப்படுகிறது; ஆனால் ஒரு முஸ்லிம் ஒரு பாபம் செய்தால் அவனுக்கு ஒரே ஒரு பாபத்தின் தண்டனை தான் அளிக்கப்படுகிறது என்று குர்ஆன் வேதம் வற்புறுத்துகிறது.

இதனால் என்ன விளங்குகிற தென்றால்: மாந்தர் நன்மையான காரியங்களிலேயே அதிகம் கவனம் செலுத்த வேண்டு மென்றும், தப்பித் தவறி ஒரு பாவமான காரியம் நிகழ்ந்து விட்டால் அதற்காக வருத்தப் படக் கூடாதென்றும், அந்த பாவத்தையும் அருள் மிகுந்த ஆண்டவன் மன்னித்து விடுவானென்றும் குர்ஆன் ஷரீப் போதிக்கின்றது.

அடுத்த படியாய் மக்கள் ஆத்ம விவகாரத்திலும் சரி, உலக விவகாரத்திலும் சரி, ஒன்று பட்டு ஒற்றுமையாய் வாழ வேண்டு மென்று குர்ஆன் போதிக்கிறது. "முஸ்லிம்களே, நீங்கள் அல்லாஹ்வுடைய சன்மார்க்கம் என்னும் வடக்கயிறை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்றும் குர்ஆன் ஷரீப் போதிக்கின்றது. "முஸ்லிம்களே, நீங்கள் ஒற்றுமைக் கெட்டு, பிரிந்து விடுவீர்களேல், உங்கள் கௌரவம் குலைந்து, நீங்கள்சீர் அழிந்து போவீர்கள்" என்று குர்ஆன் ஷரீப் என்னும் எம்திருமறை எச்சரிக்கை செய்கிறது.

திருக் குர்ஆனில் கூறப்படாத விஷயம், உலக சம்பந்தமாக மனித வாழ்வில் ஏதும் கிடையாது என்று சொல்லலாம். சுவர்க்கத்துக்குப் போகும் பாதை முதல், நரகத்தில் வீழ்ச்சியுறும் விஷயமும் போதிக்கப்பட்டுள்ளது; ஒட்டகம் முதல் ஊசிக்காது வரை அற்ப உதாரணமும் எடுத்துப்போதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, குர்ஆனில் எந்த விஷயமும் விடப்பட்டுப் போகவில்லை.

"ஜமீஉல் இல்மி பில்குர்ஆனி, லாக்கின்
தகாஸுரு அன்ஹு அப்ஹா முர் ரிஜாலி"

என்றொரு அரபிக் கவிதை யுண்டு. "எல்லாவிதமான கல்வியும் குர்ஆன் ஷரீபில் உண்டு; ஆனால் அதை உணர்ந்து கொள்வதற்குத்

தான் மனிதர்களுடைய அறிவாற்றல் போதாது" என்பது இக்கவிதையின் கருத்து.

எனவே குர்ஆனில் என்னென்ன போதிக்கப்பட்டிருக்கிற தென்பதை, ஒருவாறு விஷய சூட்சிகை முறையில் இங்கு எடுத்துக் கூறுவோம்.

(1) வானம், பூமி, பிரபஞ்சம், கடல், திடல், மலை, சூரியன், சந்திரன், நட்சத்திரம் யாவும் சிருஷ்டிக்கப்பட்ட விஷயம், குர்ஆன் ஷரீபில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

(2) ஆதிமனிதராகிய ஆதமும், அவரது வாழ்க்கைத் துணைவியாகிய அம்மை ஹவ்வாவும், மண்ணிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆதியில் சுவர்க்கத்திலிருந்த வரலாறும் விளக்கப்பட்டிருக்கிறது.

(3) ஆதிமனித உருவாகிய ஆதமுக்கு, எல்லாத் தேவர்களும் மலக்குகளும் தலை வணங்கி மரியாதை செலுத்திய விபரமும், அதில் கர்வங்கொண்ட இப்லீஸ் (ஷைத்தான்) என்பவன், அதற்கு மாறு செய்து, அல்லாஹ்வுடைய கோபத்துக்கு இலக்காய், மனித குலத்துக்கே ஜன்ம விரோதியாய் போன வரலாறும் கூறப்பட்டிருக்கிறது.

(4) பாவா ஆதமும் அன்னை ஹவ்வாவும், சுவர்க்கத்தில் அல்லாஹு தஆலாவுடைய கட்டளைக்கு மாறு செய்து, அதிருப்திக்குள்ளான விஷயமும், பின்னர் அவர்கள் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டு பூலோகத்தில் வந்து, வடக்கே ஒருவரும் தெற்கே ஒருவருமாய் பிரிந்து, கஷ்டமும் சஞ்சலமும்பட்ட வரலாறும் போதிக்கப்பட்டிருக்கிறது.

(5) அப்புறம் ஆதமும் ஹவ்வாவும் கூடிவாழ்ந்து, அவர்களுக்கு பிள்ளைகள் பிறந்து, மனித சுபாவப்படி அப்பிள்ளைகள் பாவஞ் செய்யத் தொடங்கிய வரலாறும், பிறகு அவர்கள் வருந்தி இறைவனிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு திருந்திய வரலாறும் போதிக்கப்பட்டிருக்கிறது.

(6) அப்புறம், நபி ஆதமுடைய வம்சத்திலிருந்து தோன்றிய மற்ற நபிகளின் வரலாறுகளும், ரஸூல்மார்களின் சரித்திரங்களும், அவர்களுடைய காலத்தில் அவர்களுக்கு விரோதிகளாய்த் தோன்றிய மூர்க்க மன்னர்—தலைவர்களின் வரலாறுகளும், இறுதியில் அவர்கள் அழிந்தொழிந்த கதைகளும் உரைக்கப்பட்டிருக்கின்றன.

(7) ஆதி நபி பாவா ஆதம் தொடுத்து, ஈஸா நபி காலம் வரை, மனித சமூகத்தின் நன்மைக்காக, அல்லாஹு தஆலா அனுப்பி வைத்த ஆகமங்கள், கட்டளைகள், அத்தாட்சிகள், அற்புதங்கள், ஏற்பாடுகள், வேதங்கள், அனைத்தின் வரலாறுகளும், அதனதன் சாராம்சங்களும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

(8) தாவூத் நபிக்கு அனுப்பப்பட்ட ஸபூர் வேதம், மூஸா நபிக்கு அனுப்பப்பட்ட தவ்ராத் வேதம், ஈஸா நபிக்கு அனுப்பப்பட்ட இன்ஜீல் வேதம் ஆகியவைகளில் என்னென்ன போதனை யுண்டு, என்னென்ன வரலாறு உண்டு என்ற விபரங்களும் கூறப் பட்டுள்ளன.

(9) இறுதியாய், உலக மக்க ளெல்லோரின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருவேதமாகிய குர்ஆன் ஷரீப், அருளப்பட்ட வரலாறும், அதை நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஜனங்களுக்கு எடுத்தோதிப் பிரசாரம் செய்த வரலாறுகளும், அதனால் எம்பெருமானர் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறு கஷ்டங்களும், முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் நடைபெற்ற தற்காப்பு யுத்தப் போராட்டங்களின் வரலாறுகளும் சாங்கோபாங்கமாக கூறப் பட்டிருக்கின்றன.

(10) பிறகு இஸ்லாம் மதம் பரவிய விவரங்களும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் இஸ்லாத்தில் வந்து சேர்ந்த வரலாறுகளும், முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட வெற்றிகளின் வரலாறுகளும் இஸ்லாம் பரிபூரணமடைந்து, இறுதியாக நபியவர்கள், தம் சமூகத்துக்குச் செய்த இறுதி உபதேசங்களும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

(11) பொதுவாக மனித சமுதாயத்தினரும் குறிப்பாக முஸ்லிம்களும், எப்படி குடிவாழ்க்கை நடத்த வேண்டு மென்ற இல்லற தர்மமும் துலக்கமாக போதிக்கப்பட்டுள்ளன. தாய்-தந்தை, கணவன்-மனைவி, உற்றார்-உறவினர், நண்பர்—எதிரிகள், நல்லோர்-பொல்லோர் மற்றும் அனைவருடனும் முஸ்லிம்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்ற விஷயங்களும் போதிக்கப்பட்டிருக்கின்றன.

(12) பெண் சமூகத்துக்கு ஆண்களைப் பற்றி என்ன கடமை யுண்டு, ஆண் மக்களுக்கு பெண்மணிகள் விஷயத்தில் என்ன கடமை யுண்டு, யார் யாருக்கு அடங்கி நடக்க வேண்டும், கணவன்

மனைவி தம்பத்திய உறவு நிலைப்புக்கு வழி என்ன என்ற விஷயங்களும் குர்ஆனில் போதிக்கப்பட்டிருக்கின்றன.

(13) கணவன்-மனைவிக்கு இடையில் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது, விவாகரத்து என்னும் 'தலாக்' செய்து கொள்ளலாமா? கோபத்தில் 'தலாக்' சொல்லப்பட்டு விட்டால், அதற்குப் பரிகாரம் என்ன? முடிவான தலாக்குக்குப் பிறகு மனைவி என்ன செய்ய வேண்டும்? மனைவிக்கு கணவன் என்ன நஷ்டஈடு கொடுக்க வேண்டும்? பிறகு அதே கணவனும் அதே மனைவியும் மீண்டும் கல்யாணம் செய்து கொள்வதற்கு வழி என்ன? பரிகாரம் என்ன? என்ற விபரங்க ளெல்லாம் விளக்கமாக சொல்லப்பட்டிருக்கின்றன.

(14) சொத்து செல்வம் தேடி வைத்த ஒரு குடும்பஸ்தர் இறந்து போய் விட்டால், அவர் விட்டுச் சென்ற சொத்தில் யார் யாருக்குப் பங்கு உண்டு? யார் யாருக்கு எவ்வளவு சேர வேண்டும்? என்னென்ன காரியங்களுக்கு அச்சொத்திலிருந்து முதலில் செலவு செய்ய வேண்டு மென்ற விஷயங்களெல்லாம் போதிக்கப்பட்டிருக்ருக்கின்றன.

(15) மனைவியுடன் கணவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? ஒன்றுக்கு மேல் இரண்டாவது மனைவியை மணந்து கொள்ளலாமா? அப்படி மணந்து கொண்டால், இரண்டு மனைவிகளையும் அவன் எப்படி நடத்த வேண்டும்? மனைவியரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விபரமெல்லாமும் குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டிருக்கின்றன.

(16) கணவன் இறந்து போன (விதவை) மனைவியரின் கதி என்ன, இறந்து போன கணவனின் சொத்தில் மனைவிக்கு என்னென்ன உரிமை யுண்டு, அந்த விதவை பிறகு வேறு ஒரு புருஷனை மறுமணம் செய்து கொள்ளலாமா? இதற்கு இஸ்லாத்திலுள்ள அனுமதியின் விபரம்—மற்றும் எல்லா விஷயங்களும் திருக்குர்ஆனில் போதிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமாக, ஆயிரக்கணக்கான — இலக்ஷக்கணக்கான விஷயங்கள் குர்ஆனில் போதிக்கப்பட்டுள்ளன. திருக்குர்ஆனில் சொல்லப்படாத விஷயங்கள் எதுவுமே கிடையாது என்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம்.

இக்காலத்தில் மனிதன், பஞ்சப் பூதங்களையும், சகல இயற்கை சக்திகளையும் கட்டுப்படுத்தி, அற்புதமான காரியங்களை சாதிக்கின்றான். சமுத்திரத்திலும், ஆகாயத்திலும், பூமியின் மீதும், பூமிக்கு உள்ளும், என்னென்னமோ காரியங்களை சாதிக்கிறான். அணுவைப் பிளக்கிறான். அதிலிருந்து அணுகுண்டை உண்டாக்குகிறான். அந்த அணுவிலிருந்து பிரம்மாண்டமான சக்தியை உண்டாக்குகிறான். எரிபொருள்களைக் கொண்டு, இயந்திரங்களை இயங்கச் செய்கிறான்; மலையைக் குடைகிறான்; பாறையை பிளந்து விடுகிறான்; மலையைக் குடைந்து அதற்குள் பாதையை போடுகின்றான்.

மனிதன் காற்றின் மீது மிதந்து செல்கிறான். காற்றை கட்டுப்படுத்துகிறான். காற்றே இல்லாத இடத்துக்கும் போய் உயிர்வாழ முடியுமா என்று ஆராய்ச்சி செய்கின்றான். வான வெளியிலே எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவு தூரம் போய் வருகிறான் இன்னும் மேலே போக முடியுமா என்று ஆராய்ச்சி செய்கிறான்.

மனிதன், புது மாதிரியான கட்டிடங்களைக் கட்டுகிறான். பல தளங்கள் உள்ள மாடிகளைக் கட்டுகிறான். அம்மாடியின் மீது சிரமமில்லாமல் ஏறிச் செல்ல, மின்சார சக்தியினால் தொட்டிலில் தூக்கிச் செல்லப் படுகிறான்.

மனிதன் இன்னும் என்னென்னமோ செய்கிறான். "இதெல்லாம் குர்ஆன் ஷரீபில் சொல்லப்பட்டிருக்கின்றனவா?" என்று சிலர் மனதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டு, கேள்வி கேட்கலாம்.

"ஆம்! எல்லா வருங்கால விஷயங்களுமே திருக்குர்ஆன் ஷரீபில் ஜாடை மாடை சமிக்ஞை உதாரண உபமேய முறையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன" என்று நாம் பதில் கூறுகிறோம். அதை விளக்கிச் சொல்லும் ஆற்றலுடையவர்கள், விளக்கிச் சொல்கிறார்கள்.

இதனால்தான், "சகல வித்தைகளும் ஞானங்களும் குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றை உணர்ந்து கொள்ளும் அறிவு ஆற்றல் தான் மனிதனுக்கு மிகவும் குறைவாய் இருக்கிறது" என்ற அரபிக் கவிதையின் கருத்தை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்வோமாக. எல்லாம் வல்ல இறைவனான அல்லாஹ், திருக்குர்ஆன் காட்டும் நல்வழியை உணர்ந்து நடந்து கொள்ள நம்மெல்லோருக்கும் நல்லருள் பாலிப்பானாக. ஆமீன்.

தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

((ரஷ்மத் பாகவி))

தொழுகை நேரம் பேணுதல்

* நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ஸஹாபி அபூதர்ருடைய துடை மீது திருக்கரம் அடித்து (எச்சரித்துச்) சொன்னதாவது:—

"தொழுகைகளை நேரங்கடத்தி, தாமதித்துத் தொழுகிறார்களே அப்படிப்பட்ட ஜனங்களுடைய சகவாசத்தில் நீர் இருந்தால் என்ன செய்வீர்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஸஹாபி "நாயகமே, அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் 'நான் என்ன செய்ய வேண்டும்?' என்பதை தாங்கள்தான் எனக்கு உபதேசித்தருள வேண்டும்" என்றுகேட்டுக் கொண்டார். எனவே திரு நபி (ஸல்) அவர்கள் திருவுளமானதாவது: "அப்போது, நீவிர், குறிப்பிட்ட (சரியான) நேரத்தில் தொழுதுக் கொண்டு, உம்முடைய காரியங்களை கவனிப்பீராக. அங்ஙனம் தொழுத பின், (ஜமாஅத்) தொழுகைக்கு தக்பீர் (இகாமத்து) சொல்லியாய் விட்டால், நீவிரும் மஸ்ஜிதிலேயே இருந்து, அந்த ஜனங்களுடன் சேர்ந்து (மறுமுறை) தொழுதுக் கொள்வீராக. இந்தத் தொழுகையானது உமக்கு நபிலாகி விடும்; அத்துடன் உமக்கு ஜமாஅத்துடைய நன்மையும் கிடைத்து விடும்" என்பதாகும்.

† நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:–யாரேனும் இஷாவுடைய தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவாரானால் அவர், பாதி இரவு இறைவனைத் தொழுது வணங்கிய புண்ணியம் பெறுகிறார். யாரேனும் ஸுப்ஹூடைய தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவாரானால், அவர் இரவு முழுதும் இறைவனைத் தொழுது வணங்கிய புண்ணியம் பெறுகிறார்.

பாயிதா:—ஸுப்ஹானல்லாஹ்! இரவில் நன்றாய் தூங்கி சுகம் பெறும் பாக்கியத்தோடு, ஒன்றரை இரவு தூங்காமல் இறைவனைத் தொழுது வணங்கும் புண்ணியமும் கிடைக்கிறதே, இதற்காக நாம் ஆண்டவனைப் புகழ்ந்துப் போற்றுவோமாக.

---

* முஸ்லிம், மிஷ்காத்

† முஸ்லிம், மிஷ்காத்

‡ ஒரு ஸஹாபியுடைய வீடு, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய வீட்டுக்கு வெகு தூரத்தில் இருந்தது. அப்படியிருந்தும் அவர், ஒரு வேளை ஜமாஅத்துக் கூட தவறிப்போகாமல்படி பாதுகாத்து வந்தார். மேலும் அவர், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடன் சேர்ந்தே ஜமாஅத்துடன் தொழுது வந்தார். இதனைக் கண்டு இதர சஹாபாக்களுக்கு அவர் மீது பச்சாத்தாபம் ஏற்பட்டது. எனவே அவர்கள், அன்னவரை நோக்கி,'' சகோதரரே! நீவிர், ஒரு சவாரிக் கழுதையை விலைக்கு வாங்கிக் கொண்டாலென்ன? வெய்யிலின் கஷ்டத்தை விட்டும், பாதையிலுள்ள முள், பூச்சி முதலியவைகளை விட்டும் தப்பித்திருக்கலாமே'' என்று சொன்னார்கள். அதற்கந்த ஸஹாபி, "சகோதரர்களே, கேளுங்கள்: என்னுடைய வீடு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வீட்டுக்கு அருகில் சேர்ந்திருப்பதை நான் விரும்பவில்லை'' என்று பதில் சொன்னார். இத்தப் பேச்சு ஸஹாபிகளுக்கு அதிருப்தியை உண்டாக்கி விட்டது. இதைப்பற்றி பிறகு நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் முறையிட்டுக் கொண்டார்கள். திருநபி (ஸல்) அவர்கள் அதற்கிணங்கி, அன்னவரை அழைத்து விசாரித்தார்கள். அதற்கும் அந்த மனிதர், நாயகம் (ஸல்) அவர்கள் திருச்சமுகத்திலும் அதேமாதிரி பதில் சொல்லிவிட்டு, மேலும் "எனது நாயகமே! நான் என் பாதங்களைக் கொண்டு (நடந்து) புண்ணியத்தை இறைவனிடம் சம்பாதித்துக்கொள்ள விரும்புகிறேன்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார். அதை செவியுற்று நாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷப்பட்டு, "ஆம்! உமக்கு நீர் நாடுகிற அளவுக்கு அவ்வளவு நன்மையும் கட்டாயம் கிடைக்கும்'' என்று திருவுளம் பற்றியருளினார்கள்.

அத்பான் பின் மாலிக் என்ற ஸஹாபி ஒருவர், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய திருச்சமுகத்தில் வந்து, "அல்லாஹுடைய திருத்தூதரவர்களே! எனக்கு கண் பார்வை கிடையாது; நான் அந்தகன். ஆயினும், ஒரு பெருங் கூட்டத்துக்கு இமாமத்து செய்ய வேண்டிய பொறுப்பு என்மீது விழுந்திருக்கிறது. மழைகாலத்து மழை பொழிந்தால் என் வீட்டுக்கும் மஸ்ஜிதுக்குமிடையில் ஒரு வாய்க்கால் (நிறைய தண்ணீர்) ஓடத் தொடங்கி விடுகிறது. இப்படிப்பட்ட சமயத்தில் நான் இமாமத்து செய்ய போக முடியாதவனாகி விடுகிறேன். ஆதலின், இறைவனின் திருத்தூதரே! தயவு செய்து தாங்கள் என் வீட்டுக்கு வந்து பார்த்து, நான் தொழுதுக் கொள்வதற்காக எனக்கொரு இடத்தை தீர்மானித்துக் கொடுப்பீர்களாக'' என்று வேண்டிக் கொண்டார். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள், "இன்ஷா அல்லாஹ்! நான் அப்படியே செய்

‡ முஸ்லிம், மிஷ்காத்

கிறேன்" என்று சொன்னர்கள். அதற்கிணங்க, மறுநாள் காலை அத்பானுடைய வீட்டுக்குப் போனர்கள். அப்போது ஹஜ்ரத் அபூ பக்கர் ஸித்தீக் (ரலி) யும் கூட இருந்தார்கள். யாவரும் அத்பா னுடைய வீட்டுக்குப்போய் சேர்ந்ததும், "நீவிர் இங்கு எந்த இடத் தில் தொழுதுக்கொள்ள விரும்புகின்றீர்?" என்று கேட்டார்கள். அதற்கவர், அவ்வீட்டில் ஒரு மூலையை சுட்டிக் காட்டினர். அங்கு நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தக்பீர் (இகாமத்து) சொல்லி, இரண்டு ரக்கஅத்து நபில் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றி வைத்தார்கள். அப்போது வீட்டில் இருந்த அனை வரும், திருநபி (ஸல்) அவர்களுக்குப் பின்னல் இருந்து, தொழுதுக் கொண்டார்கள். அந்த சந்தோஷத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக (விருந்து) உணவு தயார் செய்து பரிமாறப் பட்டது.

சுருங்கக் கூறுங்கால், இந்த ஹதீது ரிவாயத்திலிருந்து, "இயலாதவரா யிருந்தாலும் ஜமாஅத்திற்கு வராமல், ஜமாஅத்தில் சேர்ந்து கொள்ளாமல் இருந்துவிட்டால் அது மன்னிக்கப்படும்" என்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது.

தொழுகையின் அணிவகுப்பு

இவ்வாறே தொழுகையில் ஸப்பு (அணி) களை நேர்செய்வதை வற்புறுத்தியும் அநேக ஹதீதுகள் வந்திருக்கின்றன. அவற்றில் சில பின்வருமாறு :—

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—ஜனங்களே, நீங்கள் உங்கள் (ஸப்) அணிகளை நேரானவையாகச் செய்து கொள்ளுங்கள். எல்லாரும் நெருங்கி நின்று கொள்ளுங்கள். நான் உங்களை எதிரில் எப்படி பார்க் கின்றேனே அப்படியே என் முதுகுக்குப் பின்னாலும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்பதாகும்.

* மேலும் திருநபி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதா வது :—"இறைவனின் அடியார்களே, 'ஸப்' களை நேர்மையானதாகச் செய்து கொள்ளுங்கள். அப்படிச் செய்யாவிடில், இறைவன் உங்கள் ஹிருதயங்களில் வேற்றுமையை உண்டாக்கி வைத்து விடுவான்"

† மேலும் திருவுளமா யிருப்பதாவது :—"நீங்கள் உங்கள் 'ஸப்' களை நேரானவையாய் வைத்துக் கொண்டால்தான், உங்க ளுடைய தொழுகை பூர்த்தியடையும்.

÷இமாமுக்கு அருகில் (ஸப்பில்) நெருங்கி அறிவு விவேகமுடைய வர்கள் நிற்க வேண்டும். முதல் ஸப்பில் உள்ளவர்கள், இமாமைப்

---

* முஸ்லிம், மிஷ்காத்

† புகாரி, மிஷ்காத்

÷ முஸ்லிம், மிஷ்காத்

பார்த்து (தொழுகை அம்சங்களைப் பின்பற்றித்) தொழ வேண்டும். இரண்டாவது ஸப்பில் உள்ளவர்கள், முதலாவது ஸப்பில் உள்ளவர்களைப் பின்பற்றித் தொழ வேண்டும்.

× பின்னுல் உள்ள ஸப்புகளில் நின்று கொண்டு, முதல் ஸப்பில் (இடமிருக்க) போய் சேர்ந்துக்கொள்ள முயற்சிக்காதவர்கள், அல்லாஹுடைய ரஹ்மத்தாகிய அருளைப் பெற்றுக்கொள்வதிலும் பின் தங்கியே இருந்து விடுவர்.

‡ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—(தொழுகையில்) ஆண்களுடைய 'ஸப்பு' களிலே மிகச்சிறந்தது முதலாவது ஸப்பாகும்; அதில் மிகக் கெடுதியானது கடைசி ஸப்பாகும். அங்ஙனமே, பெண்களுடைய ஸப்புகளிலே மிகச் சிறந்தது கடைசி ஸப்பாகும்; அவர்களுக்கு மிகக் கெடுதியான ஸப்பு முதல் ஸப்பாகும். எனவே, பெண்கள் இயன்ற மட்டிலும் ஆண்களுடைய சகவாசத்தை விட்டும் எம்மட்டும் தூரம் விலகி யிருப்பார்களோ அம்மட்டும் அவர்களுக்கு நலம்.

* மேலும் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—"ஸப்புகளை கிட்டக்கிட்ட (நெருக்கமாக) நிலை நிறுத்தி வையுங்கள்; எல்லோரும் சரியாக நின்று கொள்ளட்டும். (ஸப்புக்கு) இடையில் கொஞ்சமேனும் பிரிவினை (காலி இடம்) விட்டு வைக்காதீர்கள். ஆண்டவன் மீது ஆணையாக, ஷைத்தான் (காலி இடமுள்ள) அந்த ஸப்புகளுக்கிடையில் கருப்பு ஆட்டுக் குட்டியைப்போல் பிரவேசிப்பதை நான் காண்கின்றேன்" என்பதாகும்.

(தொழுக வரும்) முக்ததீ ஜனங்கள், முதன் முதலாக, 1-வது ஸப்பைப் பூர்த்திப்படுத்த வேண்டும்; பிறகே 2 வது, 3 வது ஸப்புகளை பூர்த்திப் படுத்த வேண்டும். இதேமாதிரி கடைசி 'ஸப்' வரை பூர்த்திப் படுத்திக்கொண்டே வரவேண்டும்.

÷ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—"அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும், முதலாவது ஸப்பில் நிற்பவர்கள் மீது ரஹ்மத் (அருள்) அனுப்புகிறார்கள். ஸப்பில், பாதங்கள் சேர நெருங்கி நிற்பவர்களை அல்லாஹு தஆலா மிகவும் நேசிக்கின்றான்.

× இதேமாதிரி, முதலாவது ஸப்பில் நிற்பவர்களிலும், வலது புறத்தில் நிற்பவர்கள் மீது அல்லாஹ்வுடைய ரஹ்மத் உண்டாகிறது.

× முஸ்லிம், மிஷ்காத்
‡ முஸ்லிம், மிஷ்காத்
* அபூதாவூத், மிஷ்காத்
÷ அஹ்மத், மிஷ்காத்
× அபூதாவூத், மிஷ்காத்

‡ ஜனங்கள் கூடி ஸப்புகளெல்லாம் நேர்மையான பிறகே, நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் "அல்லாஹு அக்பர்" என்று தக்பீர் சொல்லுவார்கள். ‡ மேலும், முதலில் வலது புறம் திரும்பி "உங்களுடைய ஸப்புகளை நேரானவையாய் செய்து கொள்ளுங்கள்" என்று சொல்வார்கள். பிறகு இடது புறம் திரும்பி இதே மாதிரி சொல்வார்கள்.

ஸப்பு (அணி) யிலிருந்து விலகி நின்று தொழுது கொண்டால் அதுநிறைவேற மாட்டாது.

° ஸப்பிலிருந்து பிரிந்து தனியாக நின்று தொழுது கொண்டிருந்த ஒருவனை, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் பார்த்து "நீ தொழுகையை திரும்பவும் தொழுவாயாக" என்று எச்சரித்தார்கள்.

‖ மேலும், ஸப்புகளின் ஒழுங்கு எப்படி (அமைந்து) இருக்க வேண்டு மானால், முதலில் ஆண் பாலர்களின் அணிகள் வகுக்கப் பட வேண்டும்; அதன் பின்னால், சிறுவர்களுடையதும், அதன் பின்னால் இரண்டுங் கெட்டான் (முகன்னஸ்) களுடையதும், அவைகளுக்குப் பின்னாலேயே, பெண்களுடையதும் ஸப்புகள் இருக்க வேண்டும்.

÷ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:—முதலாவது ஸப்பில் நிற்பதனால் எவ்வளவு புண்ணியம் இருக்கிற தென்பது ஜனங்களுக்குத் தெரிந்து விடுமாயின், அந்த ஸ்தானத்தை அடைவதற்காக, ஜனங்கள் 'குலுக்குச் சீட்டு' போட்டெடுப்பார்கள்.

×× திரு நபி (ஸல்) அவர்கள் மேலும் திருவுளமா யிருப்பதாவது:—யாரேனு மொருவன், முதல் ஸப்பில் (இடம் பிடித்து) நிற்பதற்கு முயற்சிக்க வில்லையானால்—அதை இலக்ஷியம் செய்ய வில்லையானால், இப்படியாக சதா பின்னாலேயே தங்கி நிற்கும் வழக்க முடையவனானால், அவன் நரக லோகத்துடைய வேதனையை அனுபவிக்க வேண்டியவன் தான்.

தொழுதுக் கொள்ள வருபவர்கள் தொகை குறைவாக யிருந்தால், ஆண் பாலர் (பெரியவர்)களின் வரிசையில் சிறுவர்களும் சேர்ந்து நிற்பது ஆகும்.

---

‡ அஹ்மத் மிஷ்காத்,
‡ அபூதாவூத், மிஷ்காத்
° திர்மிதி, அபூதாவூத், அஹ்மத், மிஷ்காத்
‖ அபூதாவூத்—தர்ஜுமா
÷ முஸ்லிம், மிஷ்காத்
×× திர்மிதி, அபூதாவூத், அஹ்மத், மிஷ்காத்

வெளிவந்து விட்டது ! முந்துங்கள் !!

சொற்ப பிரதிகளே அச்சாயின !

தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

(ஐந்தாம் பாகம்)

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவுடைய கிருபையினல் "தப்ஸீருல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்" என்னும் எமது அருமை பெருமை வாய்ந்த தமிழ் தப்ஸீர் (குர்ஆன் விளக்கவுரையின்) ஐந்தாம் வால்யூம் என்னும் புதிய பாகம் வெளிவந்து விட்ட செய்தியை, நம் தமிழ் முஸ்லிம் மகா ஜனங்களுக்குச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த தப்ஸீர் முதல் நான்கு பாகங்களையும் வாங்கிப் படித்து பயனடைந்த அபிமானிகளுக்கு இந்த ஐந்தாம் பாகத்தின் சிறப்பைப்பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. குர்ஆனின் ஒவ்வொரு ஆயத்தும் திருத்தமான பெரிய சுத்த அறபு எழுத்தில் எழுதி பிளாக் செய்து அச்சிட்டிருப்பதோடு அதன் கீழ் செந்தமிழில் தெளிவான தர்ஜுமாவும் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதன் கீழ் வழக்கம் போல், அந்த மொழி பெயர்ப்பின் விளக்க உரை, ஷானே நுஜூல் என்னும் காரணார்த்தம், ஹிக்காயத், ரிவாயத் என்னும் கதா வரலாறுகள் முதலிய எல்லாவித பயான்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பெரிய பெரிய அறபு, உர்து தப்ஸீர் கிரந்தங்களி லிருந்தெல்லாம் இந்த வியாக்யான உரைகள் திரட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதன் நேர்த்தியும் பெருமையும் நேரில் பார்த்தால் தெரியும்.

இந்த தப்ஸீரின் ஐந்தாம் பாகமானது, குர்ஆனில் 18-வது ஜுஸு முடிவு முதல் 23-வது ஜுஸு தொடர்க்கம் வரை சுமார் 5-ஜுஸுகளுடையதாய் அதாவது ஸூறத்துல் புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூறுக்களையும் 930-பக்கங்களில் கொண்டதாய், நேர்த்தியான கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. சீக்கிரம் பிரதிகளுக்கு ஆடர் செய்யுங்கள். ஹதியா ரூ. 12-00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

யானையை வென்ற வேந்தன்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

சிறுவர்களே, நீங்கள் 'அவுரங்கஜேப்' மன்னரின் பெயரைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். பள்ளிக்கூடப் புத்தகங்களிலும் மன்னர் அவுரங்கஜேபுடைய பெயர் வருகிறது.

ஆனால், முஸ்லிமல்லாத நூலாசிரியர்களால் எழுதப் பட்டுள்ள பள்ளிக் கூடப் புத்தகங்களில், அவுரங்கஜேப் மிகக் கெட்டவர் என்றும், ஹிந்து மதத்தினரிடம் துவேஷம் உள்ளவர் என்றும், இஸ்லாம் மதத்தில் அதிகமான ஆசைஉடையவர் என்றும் எழுதிவைக்கப் பட்டிருக்கிறது. இதைப் படிக்கும் சிறுவர்கள், பெரியவர்களான பிறகும் கூட, அவுரங்கஜேப் கெட்டவர் என்றே நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் அவர்மிகவும் நல்லவர்; அல்லாஹ்விடம் அதிகம் பய பக்தி உடையவர்; இஸ்லாம் மார்க்க கட்டளையை மீறி நடக்காதவர். சுகபோகங்களில் பிரியம் இல்லாதவர்; மன்னராய் இருந்தும் சிக்கனமாக வாழக் கூடியவர்.

அவர் குர்ஆன் ஷரீப் முழுதும் மனப்பாடம் பண்ணிய ஹாபிஜ்-காரியாகவும் இருந்தார்.

'மன்னர்களாக இருப்பவர்க்கு, சுகபோகத்துக்கு என்ன குறைச்சல்?' என்று சகஜமாக எல்லோரும் கூறுவார்கள்; ஆனால் அவுரங்கஜேப், மன்னராக இருந்துங் கூட எளிய வாழ்க்கையே வாழ்ந்து வந்தார்; சிம்மாஸனத்தில் அமரும் நேரம் போக, மற்ற நேரங்களில் எளிய—வெள்ளை உடைகளையே அணிவார். ஆகார வகைகளிலும் சாதாரண உணவுப் பொருளே உண்பார்.

அவுரங்கஜேப், இஸ்லாமிய மன்னர்களில் மிகவும் பாராட்டத் தக்கவர். மற்ற சுல்தான்கள் ஆடம்பரமாக வாழ்ந்தனர்; அரசாங்கப் பணத்தைக் கொண்டு ஆடம்பரச் செலவுகள் செய்தனர்.

ஆனால் அவுரங்கஜேப், தமது சொந்தச் செலவுக்கு, அரசாங்க பொக்கிஷத்திலிருந்து பணம் எடுத்துச் செலவிட மாட்டார். தொப்பி தைத்து விற்றும், குர்ஆன் ஷரீப் பிரதி எழுதி பிறருக்கு கொடுத்தும் நியாயமான ஊதியம் வாங்கி, அதைக் கொண்டு, தன் சொந்தச் செலவு செய்வார்.

இப்படிப்பட்ட மன்னர், மகா வீரராகவும் தீரராகவும் அஞ்சா நெஞ்சம் படைத்தவராகவும் இருந்தார். அவர் வாலிபராக இருந்த போது, ஒரு மத யானையையே எதிர்த்து வென்று அடக்கி தன் வீரத்தைக் காட்டியுள்ளார். அந்த உண்மைக் கதையை, நீங்கள் அவசியம் படியுங்கள். இதோ:—

யானையை வென்ற வேந்தன்

மாமன்னர் ஷாஹ்ஜஹானுக்கும்—பட்டத்து ராணி மும்தாஜ் மஹலுக்கும் பிறந்த பிள்ளைகளில் "முஹியித்தீன் முஹம்மத் ஆலம் கீர்" என்னும் அவுரங்கஜேப் மிகவும் இளைய குமாரர்.

ஷாஹ்ஜஹான் மன்னருக்கு, யானைச் சண்டையைப் பார்ப்பதற்கு பிரியம் அதிகம். அதற்கென்று ஏற்பட்ட மதில் வட்டமான திடலில், இரண்டு யானைகளை விட்டு சண்டை யிடச் செய்து, அதை பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார், ஷாஹ்ஜஹான் மன்னர்.

ஒரு முறை ஆக்ரா கோட்டையில் ஜம்னு நதிக்கு அருகில் உள்ள திடலில், யானைச் சண்டை விடப்பட்டது. அது பெரிய தமாஷாவாக இருந்தது. பொது ஜனங்களும் ஏராளமாக வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தனர்.

அந்த வேடிக்கை பார்க்கும் ஜனங்களிலே, பதினைந்தே வயதுள்ள இளைஞரான அரச குமாரன் அவுரங்கஜேபும் குதிரை மேல் அமர்ந்து கலந்து கொண்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். தமாஷா பார்த்துக் கொண்டிருந்தவர் உற்சாகத்தில், சண்டையிடும் யானைகளுக்கு அருகில் சென்று விட்டார்.

இரண்டு யானைகள், மதங் கொண்டு, ஒன்றை யொன்று மத்தகத்தாலும், துதிக்கை யாலும், தந்தங்களாலும் முட்டித் தள்ளி சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அதில் ஒரு யானை, தோற்றுப் போய் வேறு பக்கம் ஓடிப் போய் விட்டது. ஜெயித்த யானை மதங் கொண்டு அப்படியே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

அப்போது அவுரங்கஜேப், குதிரை அருகில் சென்று விடவே, அந்த யானை அவுரங்க ஜேப் மீது பாயத் தொடங்கியது. அவுரங்க ஜேப் அதைக் கண்டு கதி கலங்கி விடவில்லை; பயந்து ஓடவும் இல்லை. குதிரை பயந்தது; ஆனால் அவர் குதிரையை தட்டிக் கொடுத்து, லகாமை இறுகப் பிடித்து அடக்கி, தடுத்துக் கொண்டார்.

அவுரங்கஜேப் தன் கையில் கூர்மையான ஈட்டி வைத்திருந்தார். ஒரு க்ஷண நேரம் தான் இருக்கும். யானை மிகவும் நெருங்கி வந்து விட்டது. கொஞ்சம் தயங்கி தாமதம் செய்திருந்தால் அந்த மத யானை அக்தக் குதிரையைத் துதிக்கையால் தூக்கி எறிந்து, அவுரங்கஜேபை கீழே தள்ளி காலில் போட்டு மிதித்துக் கொன்று இருக்கும்.

ஆனால் வீர அவுரங்க ஜேப், ஒரு க்ஷணத்துக்குள் என்ன செய்தார் தெரியுமா? யானை வந்த வேகத்துக்குத் தக்கபடி, ஈட்டியை நேராக நீட்டி, அதன் மத்தகத்தில் ஓங்கி குத்தி விட்டார்.

இதைக் கண்டு ஜனங்கள், நடுக்கம் கொண்டு, பீதியடைந்து நாலா பக்கமும் சிதறி ஓடத்தலைப் பட்டனர். அருகே இருந்த படை வீரர்கள் உயிருக்குப் பயந்து ஓடத் தொடங்கினர். அப்போது அவுரங்கஜேப் குதிரையை ஓட விட்டு, யானைக்கு கொஞ்ச நேரம் ஆட்டம் காட்டினார்.

அதற்குள், யானையை மிரட்டுவதற்காக வேறு சில சிப்பாய்கள் வாணத்தை கொளுத்தி அதன் மேல்போட்டார்கள். அப்போதும் அந்த யானை பயந்து போகாமல், அவுரங்கஜேப் மீதே வைராக்கியம்கொண்டு, பாய்ந்து அவரை குதிரையிலிருந்து கீழே தள்ளி விட்டது.

கீழே வீழ்ந்த அவுரங்கஜேப், பயந்து ஓடி விட வில்லை. சட்டென்று எழுந்து நின்று தன்னுடைய உடை வாளை உருவி, யானையின் துதிக்கை முனையை வெட்டி விட்டார்.

அதற்குள், அவுரங்கஜேபின் சகோதரர் ஷுஜா என்ற இளவரசரும், வீரத்துடன் வந்து யானையின் கவனத்தை வேறு பக்கம் திருப்ப முயன்றார். அவரையும் யானை குதிரையி லிருந்து கீழே தள்ளி விட்டது. சட்டென்று அவுரங்க ஜேப், பாய்ந்து அண்ணனைக் காப்பாற்றி விட்டு, யானையை தாக்கினார்.

பல புறமும் பல வீரர்கள் யானையைத் தாக்கி, கூச்சலிட்டு பயமுறுத்தவே யானை பயந்துப் போய், வேறு பக்கம் ஓட்டம் பிடித்து விட்டது.

அவுரங்கஜேப், இரத்தம் சொட்டும் வாளாயுதத்தைப் பிடித்த வண்ணம் நின்று விட்டார். உடனே, தந்தை ஷாஹ்ஜஹான் கீழே இறங்கி, மைதானத்திற்கு வந்து, தன் வீர திர இளங் குமாரன் அவுரங்கஜேப்பை, கட்டித் தழுவி, மார்புடன் அணைத்துக் கொண்டார்.

பிள்ளையின் தைரியத்தையும், வீரச் செயலையும் கண்டு, தந்தை ஷாஹ்ஜஹான் மனம் புளகாங்கிதம் அடைந்தார். அப்போது "பஹாத்தூர்" (மகா வீரன்) என்ற பட்டத்தையும் அளித்தார். ஏராளமான சன்மானமும் தந்தார்.

ஜனங்களும், வீர அரச குமாரன் அவுரங்கஜேபைப் பாராட்டிக் கொண்டாடினர். எல்லோரும் இறைவனுக்கு நன்றியும் செலுத்தினர்.

சிறுவர்களே! ஆபத்து நேரத்திலும் தைரியத்தைக் கை விடக் கூடாது. தைரியமும் சமயோசித புத்தியும் இருந்தால், யானை என்ன, சிங்கத்தைக் கூட தனி மனிதன் வென்று விடுவான்.

யானையை வென்ற வேந்தன் அவுரங்க ஜேப் பெயர் வாழ்க!

(ஜூன்—1958.)

கீமியாயே ஸஆதத்து

தமிழ் பொழிப்புரை.

1-வது, 2-வது, 3-வது, 4-வது ஆக 4-வால்யங்கள்.

இந்த கிதாபில் உள்ள சில விஷயங்களாவன:—

1-வது, தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னை யொன்றை தானென்றும் தலைவனென்றும் கருதுகிற பேர்களுக்கு இக்கிதாபு உணர்வை வரவைக்கும்.

2-வது, அநாதார பதர் மொழிகளால் நிறைந்த சில அஞ்ஞான புத்தகங்களை மெஞ்ஞான பொக்கிஷங்களென மதித்து மருண்டு கிடக்கின்ற மதியீனர்களின் மனதைத் திருப்பும்.

3-வது, இகபரங்கள் இன்ன தென்றறியாமல் இலோக இச்சைகளிலேயே மூழ்கி இரவும் பகலும் இதற்கே தொண்டு செய்து பரலோக வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கா திருக்கிற பேதை மாந்தர்களுக்கு இகபர விருப்பத்தை யூட்டும்.

4-வது, இபாதத்து செய்கிறவர்களுக்கு சுன்னத்து ஜமாஅத்துகளின் இஃதிகாது, இல்மை தேடல், ஒலுவு, முழுக்கு, தயம்மம் முதலிய சுத்தி வகைகள், தொழுகை நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்று அவ்ருது இவைகளின் அஹ்காம்களும் அஸ்றுருகளும் சொல்லப்பட்டிருப்பதால், இது அமல் செய்கிறவர்களுக்கு மிகவும் பிரயோஜனத்தைக் கொடுக்கும். இதன் அருமை, கிதாபை பார்த்தால் தான் அறியலாம்.

இதன் 1-வது வால்யத்தில் இபாதத்துகளுடைய பயானும் 2-வது வால்யத்தில் முஆமலாத் துடைய பயானும் அடங்கி யிருக்கின்றன.

1-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு
விலை ரூ. 3—00

2-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு
விலை ரூ. 3—60

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

தரீக்கத் என்னும் ஞான மார்க்கம்

(ரஹ்மத் பாகவி)

ஓர் ஊருக்குச் செல்வதற்கு இரண்டு பாதைகள் உண்டு. ஒன்று நேர் பாதை; மற்றொன்று குறுக்குப் பாதை.

நேர்பாதை எப்போதும் சற்று தூரமாகவே இருப்பதுண்டு. பயமில்லாமல் அதில் எல்லோரும் நடந்து செல்லலாம். இடையில் கல்லோ, முள்ளோ, பள்ளமோ இராது. நிச்சயம் போய்ச் சேரலாம் என்று நம்பிக்கையோடு அந்தப் பாதையில், பயமில்லாமல் போகலாம்.

குறுக்குப் பாதை, சில சந்தர்ப்பங்களில் சிலருக்குப் பயன்படுவதுண்டு. ஓரிடத்துக்கு ஒரு கார்யார்த்தமாய் அவசரமாய்ப் போய்ச் சேர வேண்டியிருந்தால், குறுக்குப் பாதை வழியே போகலாம். அங்ஙனம் அந்தக் குறுக்குப் பாதையில் போகும் போது, எதிர் பாராத இடையூறுகளோ, இடறுதல்களோ, சறுக்குதல்களோ எற்படலாம். சில சமயங்களில் பள்ளங்களில் விழுந்து உயிருக்கு ஹானியும் ஏற்படுவதும் உண்டு.

ஷரீஅத்

ஷரீஅத் என்பது நேரான பாதை; எல்லோருக்கும் பொதுவான நன்மையளிக்கும் நல்ல பாதை; இலேசான சங்கடங்களோ, இடறி விழுந்து நலிவதோ கிடையாது. சர்வ சாதாரணமாய், சிறியோர், பெரியோர், அறிந்தோர், அறியாதோர் எல்லோருக்கும் உவந்த பாதை ஷரீஅத் ஆகும்.

ஷரீஅத்தின்படி நடந்து ஒழுகுவோருக்குப் பிரத்தியேகமான குருவோ, ரகசியம் கூறும் பீர்—மஷாயிக்கோ தேவையில்லை. நம் பெரியோர்கள் எந்த மாதிரி சன்மார்க்க விஷயங்களில் நடந்து செயல் புரிந்து ஒழுகினார்களோ அந்த மாதிரி, அனுதினமும் நடந் தொழுகினால் போதும். கோரிய லக்ஷியத்தை என்றேனு மொரு நாள் அடைந்தே தீருவோம் என்ற நம்பிக்கை யுண்டு; இந்நேர் பாதையில், பள்ளம் மேடுகளோ, கரடு முரடு முள்களோ இராது. எனவே, க்ஷேமமான—ஸலாமத்தான பாதை ஷரீஅத் தாகும்.

நல் அமல்

சாதாரணமாக ஒவ்வொரு முஸ்லிமும் கலிமா ஓதி ஈமான் கொண்டு, ஹனபி—ஷாபிஈ—மாலிக்கி—ஹன்பலி ஆகிய நான்கு மதுஹபுகளில் ஒரு மதுஹபைப் பின் பற்றி, பெரியோர்கள் சொல்லிய வண்ணம், நற்குண நல்லொழுக்கத்தோடு நல்அமல் புரிந்து வந்தால், அவர்கள் ஷரீஅத்தின்படி நடக்கும் 'முத்தகீ' என்றும், 'மூமின்' என்றும் கருதப்படுவார்.

கலிமா, தொழுகை, ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு ஆகிய ஐம் பெரும் கடமைகளை சரிவர நிறைவேற்றுவதுதான் ஷரீஅத்தின் படிநடப்பதாகும். இதில் எல்லா கிரியைகளும் கொள்கைகளும் பகிரங்கமாகவே இருக்கும்; இதில் எதும் ரகசியமோ மறைபொருளோ கிடையாது. இன்ன காரியம் நன்மை தரும், இன்ன காரியம் தீமை தரும் என்று நமக்கு கற்பிக்கப்பட்டிருப்பதை யொட்டி நடந்துய்வது எல்லோருக்கும் பொதுநலம் நல்குவதாகும்.

ஞானமார்க்கம் எது?

இக்காலத்தில் சிலபேர், சர்வசாதாரணமாய் ஐந்துவேளை, தொழுதுக் கொள்வதில்லை; ஆனால் ஏதோ அவ்ராது—வஸீபா—தருது—கலிமாக்களை, குறிப்பிட்ட நேரங்களில், தனிப்பட்ட முறையில் ஓதி இருந்து விடுவர்.

அப்படிப்பட்டவர்களை யணுகி, "என்ன, நீர் எங்களைப் போல் தொழுதுக் கொள்ள, பள்ளிக்கு வருவதில்லையே, ஏன்? எங்களைப் போல் நடந்து கொள்வதில்லையே ஏன்?" என்று கேட்டால், "நாங்கள் தரீக்கத்து காரர்கள்; மஃரிபத்து அறிந்தவர்கள்; எங்கள் மீது சாதாரண தொழுகை கிடையாது; நாங்கள் ஷரீஅத்துடைய படித்தரத்தைக் கடந்து, மேலே போய் விட்டவர்கள்; மேலே மாடியில் போய்ச் சேர்ந்தால் கீழே உள்ள படிகளைப்பற்றி எங்களுக்கு என்ன அக்கறை? எங்களுக்கு நரகம் கிடையாது; நேரே சுவர்க்கத்துக்குப் போகும் ஞானமார்க்கத்தை எங்கள் பீர், எங்கள் குரு, எங்கள் ஷெய்கு, எங்கள் மவ்லானா எங்களுக்கு காண்பித்துக் கொடுத்து விட்டார். நாங்கள் தனி மார்க்கத்தில் போகிறவர்கள்; ஷரீஅத்தின் கட்டுப்பாடு திட்டங்கள் எங்கள் மீது பாதிக்காது" என்பன போன்ற பதில் மொழி கூறுகின்றனர்.

இது நேர்மையா?

அங்ஙனம் ஒரு சிலர் கூறுவது நேர்மையானதுதானா? அம்மார்க்கம் நம் இஸ்லாமில் அனுமதிக்கப்பட்டிருக்கிறதா? ஞானமார்க்கத்தின்படி நடப்பவர், மற்றவர்களைப்போல் தினம் ஐந்து நேரம் தொழு

துக் கொள்ள வேண்டியதில்லையா? அமல் செய்யாமலே அவர்களுக்கு நரகம் எப்படி ஹராமாய் விட்டது? எப்படி அவர்கள், உலகிலேயே சுவர்க்க உரிமையாளராய் விட்டனர்?

இவ்வளவு தூரம் தைரியமாய்ப் பேசும் ஆற்றல் அவர்கட்கு எப்படி உண்டாகிற தென்பது கவனிக்கத் தக்க தாகும். முரீது கொடுப்பது—பைஅத்து பெறுவது—மஃரிபத்து கற்பிப்பது—தரீக்கத்தைக் காட்டித் தருவது—ஹக்கீகத்தை விளக்கித் தருவது போன்ற ரகசிய ஒப்பந்தங்கள், இக்காலை முர்ஷித்களுக்கும் முரீதீன்களுக்கு மிடையே நடைபெற்று வருகின்றன.

முர்ஷித்கள், தம் சிஷ்ய கோடிகளுக்கு ரகசியத்தில், இருட்டு அறையில் என்னென்னமோ கற்பிக்கிறார்கள். என்னென்னமோ போதிக்கிறார்கள்! திருக் குர்ஆனில் இல்லாத 'அஸ்ரார்'களும் அவர்களால் போதிக்கப்படுகிறதாம்! சாதாரண ஹதீதுகளில் காணக் கிடைக்காத ரகசியப் பேச்சுகள் அவர்களுடைய வாயிலிருந்து உதிர்கிறதாம்! (அல்லாஹு அஃலம்! அதை) எல்லாம் அறிந்த ஆண்டவனே நன்கறிவான்.

வேஷதாரிகள்·

முர்ஷித்கள், மஷாயிக்குகள் இக்காலை எங்கும் சர்வ சாதாரணமாய் காணப்படுகின்றனர். நீண்டு வளர்ந்த அடர்த்தியான தாடி இருக்கும் அவர்களுக்கு! நீளமான அங்கி என்னும் ஷாயாவும் ஜுப்பாவும் அணிந்திருப்பர்; சில பேர் 'கபனீ' என்னும் துறவிச் சட்டை அணிந்திருப்பர். தலையிலே பச்சைத் தலைப்பாகை பெரியதா இருக்கும்; அல்லது உச்சிக் கூரான வெள்ளைத் தொப்பி இருக்கும். கையிலே சதா சர்வகாலம் 100-மணிகள் கொண்ட தஸ்பீஹு என்னும் ஜபமாலை இருக்கும். அந்த மாலையின் மணிகளை அவர்களின் விரல்கள், ஒவ்வொன்றாய் உருட்டிக் கொண்டே இருக்கும்; நாவு-அல்லது உதடு சதா அசைந்து, எதையோ உச்சரித்து ஓதிக்கொண்டே இருக்கும். சில சமயங்கள் அவர்கள் பிறருடன் பேசிக்கொண்டிருக்கும் போது கூட, தஸ்பீஹ் மணிகள் வழக்கம் போல் உருண்டு கொண்டே இருக்கும்.

இப்படிப்பட்ட படாடோபமான 'மஷாயிகு' மார்கள், ஆண்களைவிட பெண்மணிகளுக்கே அதிகம் உபதேசம் செய்வார்கள். இவர்கள் யௌவனப் பெண்மணிகளுக்கும் யாதொரு ஒளிவு திரையின்றி, தரீக்கத்துடைய ரகசியங்களை எளிதில் எடுத்துரைப்பார்கள். யாரேனும் சிறு வயது மங்கை நாணிக் கோணி வெட்கப்பட்டால், "அம்மா! குழந்தை! நான் உன் தகப்பனார் போல், நீ என் புத்திரி

போல் இருக்க வேண்டும். ஞான குருவிடமா கோஷா-பர்தா-வெட்கம் எல்லாம்! மனதுக்கு மனது மார்க்க முண்டான பின், இந்த ஷரீஅத்துடைய கட்டுப்பாடெல்லாம் எடுபட்டுப்போகிறதே, தெரிந்து கொள்ளம்மா'' என்று இதோபதேசம் செய்வார்கள்.

அதன் பின், அந்தப் பெரிய மனிதருக்கு என்னென்ன உபசாரம், என்னென்ன அனுகூலங்கள் கிடைக்கு மென்பதைச் சொல்லித் தெரிய வேண்டிய தில்லை.

உண்மையான 'மஃரிபத்'

'மஃரிபத்' என்ற பதம் பொதுவான அரபிச் சொல். இது யாருக்கும் சொந்தமானதல்ல. ''மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு'' என்பது பிரபலமான ஒரு ஹதீது. ''எவன் தன் நப்ஸ் என்னும் அந்தரங்கத்தை உணர்ந்து கொண்டானோ, அவன் இறைவனை உணர்ந்து கொண்டவனாவன்'' என்பது அதன் கருத்து.

''உன்னையே நீ எண்ணிப்பார்'' என்ற சொல்லிலும் அந்தக் கருத்து அடங்கி இருக்கிறது. நமது பிறப்பு, வாழ்வு, மரணம் இம்மூன்றையும் நன்கு ஓர்ந்து உணர்ந்து பார்த்தால், நம் உயிர் வாழ்வு சதமல்ல வென்பதும், நாம் மரித்து இறைவனிடமே போய்ச் சேரவேண்டும் என்பதும் நன்கு புலனாகும். இதுவும் 'மஃரிபத்து' தான்.

மஃரிபத் என்பதற்கு அந்தரங்கத்தை உணர்தல் என்பது கருத்து. எனவே, மஃரிபத்தோ, தரீகத்தோ நம் ஷரீஅத்துக்கு அப்பாற்பட்டதல்ல; அதற்கு எதிரிடையானதல்ல. உண்மை உணர்க. வஸ்ஸலாம்.

இங்லீஷ்-உர்து, உர்து-இங்லீஷ் அகருதிகள்

இங்கிலீஷ் உர்தூ பெரியது	விலை ரூ.	9-50
உர்தூ இங்கிலீஷ் பெரியது	விலை ரூ.	9-50
இங்கிலீஷ் உர்தூ சிறியது	விலை ரூ.	3-00
உர்தூ இங்கிலீஷ் சிறியது	விலை ரூ.	3-00

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

துப்பு துலக்கிய தூயவர்.

அத்தியாயம் 20

ஒரு நாள் காலை வால் டாக்ஸ் ரோடு வழியாக வந்து கொண்டிருந்த போது, பழகிய மனிதனொருவனை சிப்கத்துல்லா கண்டார். "பேபி நிக்கர்" என்று கூவி விற்றுக் கொண்டிருந்தான் அவன். அவனை எங்கோ பார்த்த ஞாபகம் அவருக்கு இருந்தது. ஆனால் அவரை அந்த மனிதன் தெரிந்திருந்தான்: அவனது விகார தோற்ற முள்ள முகத்தில் புன்னகையின் ரேகை படர்ந்தது.

"அஸ்ஸலாமு அலைக்கும், ஹஸ்ரத்" அவன் முகமன் கூறினான். "குழந்தைக்குச் சிறு நிக்கர் வாங்கிக் கொள்கிறீர்களா?"

"உனது பெயர் பஸ்லுர் ரஹ்மான் அல்லவா?" புன்னகை ததும்ப சிப்கத்துல்லா வினவினார். "எனக்கு அந்த நிக்கர் எதற்காக? நான் பிரம்மசாரியல்லவா?"

"ஆம், என் பெயர் பஸ்லுர் ரஹ்மான். நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொள்வீர்கள் என்று நான் நினைக்கவில்லை. தொழில் எவ்வாறு இருக்கிறது?"

"அமைதியாக விருக்கிறது. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

அந்த மனிதன் தன் திரண்ட தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

"இவைகளை விற்றுப் பிழைக்கிறேன்." இவ்வாறு கூறி விட்டு, கை விரல்களை கத்திரி போல அமைத்துக் காட்டி, "சிறிது வருமானம் இதன் மூலம் கிடைக்கிறது."

கத்திரி போட்டுப் பிழைப்பதென்றால், ஜேபடித் திருட்டுத் தொழில் என்று சிறை வாழ்பவர்களிடையே புரிந்து கொள்ளப்படும். பொது ஸ்தான கட்டங்களிலும் சந்தைகளிலும் கூட்டங்களிலும் கூரிய அறிவும் சுறு சுறுப்பான விரல்களுமுள்ளவனுக்கு நல்ல வருமானம் உண்டு என்பது சிப்கத்துல்லாவுக்குத் தெரியும்.

"உனக்கு எப்போதாவது தண்டனை கிடைத்திருக்கிறதா?"

"இல்லை," அவன் முணு முணுத்துக் கொண்டே சொன்னான். "அவர்களால் முடியாது என்பது எனக்குத் தெரியும். போலீஸ்காரனை நான் நையப்புடைத்த தன் காரணம் இது தான், கயவன் கரீம் ஷரீபைக் கண்டேனானால் நான்..."

சிப்கத்துல்லா விரலால் சமிக்ஞை காட்டினார். அந்த வழியே போலீஸ் காரனொருவன் வேகமாகச் சென்று கொண்டிருந்தான்;

அவர்களிரு வரையும் சந்தேகக் கண்களோடு அவன் நோக்கினன் இழிவான தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒருவனோடு தொடர்பு கொண்டிருப்பது மரியாதைக் குறைவு என்று அவர் அபிப்பிராயப் பட்டார் போலும். எனினும், அந்த மனிதனைப் போலீஸ் காரன் இழிவாகக் கருதினாலும் அவனோடு அவர் நின்றிருப்பதைப் பார்த்து, மரியாதையாகச் சென்று விட்டான்.

"என்ன ஜென்மம் இது"—அந்த போலீஸ் காரன் சென்று விட்டதும் பஸ்லுர் ரஹ்மான் பெரு மூச்சு விட்டான். "என்ன ஜென்மம் இது."

அவரை அவன் ஏற இறங்க வியப்போடு கவனித்தான்.

"நீங்கள் உங்கள் காலம் முடிந்து வெளியே வந்து விட்டீர்களா? உங்கள் மீது சுமத்தப் பெற்ற குற்றம் என்ன? இப்போது நீங்கள் எதில் சம்பந்தப் பட்டிருக்கிறீர்கள்?"

சிப்கத்துல்லா சிரித்துக் கொண்டார்.

"அதனை நீ புரிந்து கொள்வது கடினம். நான் நாணயமாக நடந்து வருகிறேன்."

"இந்த சமாசாரம் எனக்குப் புதிதாக அல்லவா இருக்கிறது! கரீம் ஷரீபைக் கண்டீர்களா? அவன் பெரிய ஆள். அவனது மகன் காதர்கான் பெரும் புள்ளி."

அவனது கண்களில் பிரகாசம் மின்னியது. அவனது பார்வையிலிருந்து சமீப நிகழ்ச்சிகளை அவன் உணர்ந்திருந்தானென்பதை உணர்த்தியது; அவனது பேச்சு அதனை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்தது.

"கரீம், காதர் கும்பலை விட்டு விலகிக் கொள்ளுங்கள், காப்டன சாஹிப், அவர்களால் எவருக்கும் எவ்வித நன்மையும் விளைவதில்லை. குறிப்பாக, உங்களைப் போன்ற இரட்டைப்பட்டதாரிகளுக்கு அவர்களால் உபத்திரவம் தான் விளையும். கரீம்ஷரீபுக்குச் செய்ய வேண்டிய 'கடமை'யொன்று இருக்கிறது; அதனை நான் செய்து முடிப்பேன். ஆனால் அதைப் பற்றிக் கூட நான் கவலைப் பட வில்லை. காதர்கான் தான் என் கவனத்தைக் கவர்ந்திருக்கிறான். உங்கள் மீது அவன் 'கண்' வைத்திருக்கிறான். கனவான் போல உடை தரித்து, கனவான் போல நடந்து கொள்வதால் கள்ள நோட்டு தயாரிப்பவர் என உங்களைக் காட்டிக் கொடுத்து விடுவது சுலபம்."

"கள்ள நோட்டுத் தயாரிப்பவனா?"

"ஆம் அவன் தான் கள்ள நோட்டு அச்சிடும் பெரும் புள்ளி. சிறையில் நீங்கள் கேட்ட வதந்திகளெல்லாம் உண்மை கீழ்த்திசை நாடுகளிலே மிகப் பெரும் அளவில் கள்ள நோட்டுகளை அச்சிட்டு புழக்கத்துக்கு விடுபவன் அவன். என்றாவதொரு நாள் அவன் பிடிபடுவான். பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுத்தானே ஆக வேண்டும். பத்திரிகைகளில் வெளியாகும் தகவல்களை நம்ப முடியு

மானால், அக்காலம் வந்து விட்டது என்று நான் சொல்வேன். அவனைச் சுட்டது யார்?" திடீரென்று கேட்டான்.

சிப்கத்துல்லா தலை யசைத்தார்.

"பரம இரகசியம் என்று சொல்லப் படுவது அது." என்றார்.

தம்மையே அவன்உற்று நோக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவர் சப்தமிட்டுச் சிரித்தார். "அது நான் அல்ல, ரஹ்மான்! உனக்கு உறுதியாகச் சொல்கிறேன். நான் காதர் கானின் நண்பன் என்பதைப் பொறுத்த வரை, எனக்கு அது பிடிக்க வில்லை. உனது செல்வ நிலை எவ்வாறு இருக்கிறது?"

"மிகச் சீர் கெட்டது" அவன் சுருக்கமாகச் சொல்லி முடித்தான். அவனது வியாபாரச் சரக்கு வைத்திருந்த தட்டில் சில கரன்ஸி நோட்டுகளை அவர் வைத்தார்.

அவர் அவசரமாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பிறகு அவரை அவன் அழைத்தான்.

"மாமியார் வீட்டுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்" அவன் உபதேசம் செய்தான். "உதவாக்காரை உபதேசம் செய்கிறேன், என்று உதாசீனமாக இருந்து விடாதீர்கள். டெஹ்ராடன் சிறையைப் பற்றி நான் பேச வில்லை. அதைவிட மிகக் கேவலமான, கேடுகெட்ட சிறைகள் இருக்கின்றன. சொந்த அனுபவம் பெற்றிருப்பதால் அவற்றைப் பற்றி என்னால் சொல்ல முடியும்."

'நன்றி' எனும் வார்த்தை கூடச் சொல்லாமல் தட்டில் அவர் வைத்த கரன்ஸி நோட்டுகளை வாரிச் சுருட்டிச் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான்.

"புதுச் சேரி சிறை மிக மோசமானது. மிகக் கேவலமானது என்பதை மறந்து விடாதீர்கள். காட்டிலே உள்ள கேடு கெட்ட சிறை அது. அதற்குள் செல்ல நேர்ந்தால், வெளியே வந்து விடுவதற்கு எத்தனியுங்கள்."

டெஹ்ரா டன்னில் "வாசம்" செய்த காலத்தில் குற்றவாளியின் மனோநிலை பற்றி சிப்கத்துல்லா சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்திருக்கிறார். வால்டாக்ஸ் ரோடு வழியாக நடந்து சென்று கொண்டே, பஸ்லுர் ரஹ்மானின் எச்சரிக்கை பற்றி எண்ணமிடலானார். அவனால் அங்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்ள முடியா விட்டாலும், மற்றவரை அவன் தடுத்து நிறுத்தப் பார்க்கிறான். பழைய கைதிகளின் அனுபவ முத்திரைகள் அசைக்க முடியாதவை. குற்றவாளிக் கூண்டிலிருந்த கைதிகளின் எச்சரிக்கைகளை மணிக்கணக்காக அவர் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார்.

ஆனால் புதுச்சேரி சிறையைப் பற்றி அவர் கேள்விப்பட்டதில்லை. குறிப்பிட்ட வொரு சிறைச் சாலை மீது பஸ்லுர் ரஹ்மான் பகைமை—வெறுப்பு—கொண்டிருந்தது விசேஷமாகக் கவனிக்கத் தக்கதல்ல. குற்றவாளிக் கும்பலைச் சேர்ந்தோருக்கு விருப்புகளும்

187075

வெறுப்புகளும் உண்டு. விசேஷ காரண மெதுவு மின்றி ஒரு சிறை மீது பிரியமும் மற்றொன்றின் மீது வெறுப்பும் அவர்கள் கொண்டிருப்பதும் இயற்கை.

இவ்வாறு சிந்தனைச் சுழலில் சிக்கிய வண்ணம் நடந்து சென்ற அவர் இன்ஸ்பெக்டர் இனாயத்துல்லா கானின் மீது மோதிக் கொண்டார். இந்த மோதல் தற்காலிகமானதல்ல. சிந்தனையி லாழ்ந்த வண்ணம் நடந்து சென்ற வாலிபர் மீது இன்ஸ்பெக்டர் வேண்டு மென்றே மோதிக் கொண்டார்.

“நீர் என்ன திட்டமிட்டுக் கொண்டிருக்கிறீர்—நகைக் கடையில் திருடுவதற்கா? அல்லது கிண்டி குதிரைப் பந்தயத்தில் வெற்றி பெறுவதற்கா?”

சிப்கத்துல்லா கலுக்கென சிரித்தார்.

“இரண்டு மில்லை. புதுச்சேரி சிறை எப்படி மிக மோசமானது, எந்த வகையில் கேடு கெட்டது என்பதைத் தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அந்த சிறையைப் பற்றிய சமாச்சாரம் என்ன?”

“புதுச்சேரி சிறையா?— எனக்கு ஞாபக மில்லை—இல்லை, ஞாபகம் வருகிறது. ஏன்? எதற்காக கேட்கிறீர்?”

“இந்நாட்டிலே மிகக் கேடு கெட்ட சிறை அது என்று ஒருவன் சொன்னான். அதனால் தான் விசாரித்தேன்.”

“எல்லா சிறைகளும் கேடுகெட்டவைகள் ஆகும். நீர் கோடை கால “வாசம்” பற்றிச் சிந்தித்தீரானால் எந்த சிறையையும் உமக்கு நான் சிபாரிஷ் செய்ய முடியாது. புதுச்சேரி சிறை மிகக் கேடு கெட்டதாக விருந்தது. ஆனால் இப்போது அது அரசாங்கத்தின் வசமில்லை. இந்தியர்களின் கிளர்ச்சிக்குப் பிறகு அதனை நிர்வாகத்தினர் விற்று விட்டனர். பெரிய சிறைகளை விஸ்தரித்து அங்குமிங்கும் சிதறிக் கிடக்கும் சிறிய சிறைகளை விலைக்கு விற்று விடுவதில் அவர்கள் முனைந்திருக்கிறார்கள். எனவே, புதுச்சேரி சிறையைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டியதில்லை. உமது சிறை தோழர்களிலொருவன் உம்மை எச்சரித்தான் போலும்.”

“உங்கள் ஊகம் சரியானது” மேற்கொண்டு விவரமெதுவும் அளிக்காமல் பேச்சை சிப்கத்துல்லா பேசிக்கொண்டே முடித்துக் கொண்டார். இன்ஸ்பெக்டருடன் பேசிக் கொண்டேநடந்து சென்றால் பேபி சிக்கர்விற்பனை செய்யும் பஸ்லுர் றஹ்மான் அவர் கண்களில் பட்டு விடுவான், என்று அவர் அஞ்சினார்.

“காதர்கான் குணமடைந்து வருகிறான்” பேச்சை வேறு திக்கில் திருப்பினார் இன்ஸ்பெக்டர். துப்பறியும் இலாகாவிலே இந்த அபிவிருத்தி மகிழ்ச்சியைத் தோற்றுவித்திருக்கிறது. சட்டப்படி சாக்ஷிய ஆதாரங்களுடன் தூக்கிலிடப்படும்வரை ஒருவன் உயிருடன் இருக்க வேண்டுமென நாங்கள் விரும்பினால் அந்த மனிதன்

காதர் கானுகத்தான் இருக்க வேண்டும். நீர் என்ன சொல்லப் போகிறீர் என்பது எனக்குத் தெரியும்—அவனுக்கு எதிராக சாக்ஷியம் அல்லது ஆதாரம் எதுவுமில்லை. அது உண்மைதான். தந்திர சாமர்த்தியத்தால் எங்களை ஏய்த்து விடுகிருன் காதர். அவன் தவறுகள் இழைப்பதில்லை. கள்ள நோட்டு அச்சிடுபவனிடம் இத்தகைய சாமர்த்தியம் காணப்படுவது அபூர்வம். கள்ள நோட்டு எதுவும் அவன் வைத்திருப்பதில்லை; அவன் தங்கி யிருக்கு மிடங்களிலும் ஒரு கள்ள நோட்டையும் காண முடியாது. சந்தேகத்தின் பேரில் இருதடவைகள் அவனை நாங்கள் பிடித்து விட்டோம். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை சோதனை யிட்டும் ஒன்றும் கண்டுபிடிக்கத் தவறி விட்டோம். இவ்விஷயத்தில் விவேகமாக அவன் நடந்து கொள்கிருன்."

வீதியின் அந்தக் கோடியில் காணப்பட்ட ஒரு உருவத்தை அவர் பார்த்துக் கொண்டிருந்தார்; அது சிப்கத்துல்லாவுக்கும் பழக்கமானதுதான்.

"அந்தக் கனவானை உமக்குத் தெரியுமா?"

"ரஜாக்கான் என்ற பெயருள்ள அந்த மனிதரைத்தானே கேட்கிறீர்கள். ஆம், தெரியும் அவர் ஒரு துப்பறிபவர்."

"சாமானிய மக்களிடையே துப்பறிபவரென அவர் கருதப் படுகிருர். ஆனல் நாங்கள் அவரை அவ்வாறு அங்கீகரிக்க வில்லை."

"பாங்க்குகளால் அமர்த்தப்பட்டிருப்பவர் அவர், அல்லவா?

"அவர் பாங்க்குகளின் கையாள். தோற்றத்தில் காண்கிறபடி அவர் முட்டாள் அல்ல. காதர்கானை நேற்று அவர் போய் பார்த்தார். அவர் நடவடிக்கைகளை நோட்டமிடுவதற்கு ஒரு ஆசாமியை நான் அமர்த்தி யிருக்கிறேன். அதனல் எனக்கு விஷயம் தெரியும். எனக்குத் தெரிந்ததைவிட காதர்கானைப் பற்றி அவருக்கு அதிகம் தெரியும்"

இன்ஸ்பெக்டரிட மிருந்து சிப்கத்துல்லா விடைபெற்றுக் கொண்ட போது, ரஜாக்கான் பார்வையிலிருந்து மறைந்து விட்டார். மூலைக் கோத்திரத்தில் அந்த மெலிந்த வயோதிகர் பஸ்ஸுக்குக் காத்திருப்பதை சிப்கத்துல்லா கண்டார். பஸ் வந்து அவர் அதில் ஏறிக்கொள்ளும்வரை அந்த மனிதரையே அவர் அக்கரையுடன் கவனித்துக் கொண்டிருந்தார். பஸ் புறப்பட்டதும் அது போய்ச் சேருமிடத்தைக் கவனித்தார். "தங்கசாலை-சென்ட்ரல்" என்று போர்டு போடப்பட்டிருந்தது.

ஸென்ட்ரல் ஸ்டேஷன் போவதற்கு அவர் இவ்வளவும் சுற்றிக் கொண்டு வந்து பஸ் ஏறியது அவருக்கு ஆச்சரியம் அளித்தது.

வேலூருக்குச் செல்வதற்கான ரயில்வே நிலையம் சென்ட்ரல் ஆகும்.

(தொடரும்)

யூனானி வைத்திய முறைகள்.

இரண்டாம் பதிப்பு

(தமிழில்)

இந்த புஸ்தகம் பல உர்து கிதாபுகளிலிருந்து சேகரிக்கப்பட்டு தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டது.

இதில் மனிதனுக்கு வரக்கூடிய நோய்களை பல தலைப்புகளுக்கு அடியில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தலைப்புக்கும் அடியில் வரும் அநேக நோய்களுக்கும் பலவித மருந்துகள் கூறப்பட்டு இருக்கின்றன. இந்த மருந்துகள் நமது வீட்டிலேயே சொர்ப்ப செலவில் தயாரித்துக் கொள்ளக் கூடியவைகள். இதில் கூறப்பட்ட தலைப்புகள்:—

சிரசு சம்பந்தப்பட்ட நோய்கள், சரீர சம்மந்தப்பட்ட நோய்கள், தாது சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு விஷயங்களுக்கு பல்வேறு சிகிச்சைகள், மூலத்திற்கு பல்வேறு பாகங்கள், கழுத்து சம்பந்தப்பட்ட நோய்கள், காச சம்பந்தப்பட்ட நோய்கள், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு நோய்கள்.

இதில் குறிக்கப்பட்ட எல்லா நோய்களுக்கும் மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சில விடங்களில் ஒரே நோய்க்கு சுமார் 40, 50. மருந்துகள் வரை விவரிக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது என்று சொல்ல அவசியம் இல்லை. 282-பக்கங்களைக் கொண்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா. 3

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

கரித்தூள் அட்டை (Corbonised Card-board) யை மெல்லிய கம்பியாகச் செய்து அதிலே மின்சாரம் பாய்ச்ச எடிசன் முயற்சித்தார். இப்பரிசோதனை மிகவும் வெற்றியளித்தது. விளக்கின் 'ஆயுள்' நூற்று எழுபதுமணி நேரமாகப் படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. 1879-ம் வருடப் புத்தாண்டு தினத்துக்குமுன் சாயந்திரம் பகிரங்கப் பரிசோதனை நடத்திக் காட்டப்பட்டது. மென்லோ பார்க் முழுவதும் புதிய விளக்குகள் பிரகாசத்துடன் எரிந்து கொண்டிருப்பதைக் காண சுமார் மூவாயிரம்பேர் கூடி விட்டனர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து காஸ் (Gas) பங்குகளின் மதிப்பு மிகவும் குறைந்து விட்டது.

வியாபார ரீதியிலே மின்சார விளக்கு வெற்றிபெற வேண்டுமானால் மிகக் கடினமானதும் நீடித்து உழைக்கக் கூடியதுமான கம்பியை விளக்கில் பொருத்துவது அவசியம் என்பதை எடிசன் உணர்ந்து கொண்டார். ஒருநாள் காலை அவரது கூரிய கண்கள் பனைமர ஓலையை கவனித்தன. அந்த ஓலையின் வெளிப்புற விளிம்புகளில் காணும் மெல்லிய மூங்கிலை விளக்கு எரிக்க பயன் படுத்தலாம் என்ற யோசனை அவருக்கு ஏற்பட்டது. உடனே, மூங்கிலை செதுக்கி, மெல்லிய சிறு கம்பியாக்கிக் கரித்தூளை அதற்குள் செலுத்தினர். இந்தக் கம்பி மிகப் பிரகாசமாக எரிந்தது.

இப்பரிசோதனையின் காரணமாகச் சிறந்த ரக மூங்கிலைக் கண்டு பிடிப்பதற்கு உலகம் முழுவதும் முயற்சி நடைபெற்றது. மொத்தத்தில் சுமார் ஆறாயிரம் விதமான செடிகளையும் நார்களையும் எடிசன் பரிசோதித்துப் பார்த்துக் கடைசியில் ஜப்பானில் அவருக்காகவே விசேஷமாக வளர்க்கப்பட்ட ஒரு வகை மூங்கிலைத் தெரிந்தெடுத்தார். கரித்தூள் செலுத்தப் பெற்ற மூங்கில் கம்பி பத்து வருடங்களுக்கும் அதிகமாக உபயோகத்தில் இருந்தது. பிறகு வேறு விதக் கம்பிகள் உபயோகிக்கப் படலாயின.

வீட்டு உபயோகத்துக்கு லாயக் குள்ளதாக இருக்க வேண்டுமானால் ஒவ்வொரு விளக்கையும் தனித் தனியாக இயக்கு வதற்கான உபாயம் கண்டு பிடிக்கப் படுவது அவசியம் என்பதை எடிசன் தெரிந்து கொண்டார். அப்போது உபயோகத்திலிருந்த பிறை வடிவு விளக்குகள் மொத்தமாக எரிந்து வந்தன; அதாவது, எல்லா விளக்குகளிலும் மின்சாரம் சென்றது. ஒரு விளக்கு அவிந்து விட்டால் எல்லா விளக்குகளும் எரியாமற் போயின. எனவே, ஒவ்வொரு

விளக்கும் தனித் தனியாக எரியும் வழி வகையைக் கண்டு பிடித்து இக்குறை பாட்டை நீக்கியதோடு ஸ்திரமான மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான கருவியையும் அவர் கண்டு பிடித்தார்.

அந்தச் சமயத்திலே உபயோகத்தில் இருந்து வந்த எல்லா மின்சார உற்பத்திக் கருவி (Generator) களும் பிறை வடிவு விளக்கு களுக்கென்றே உருவாக்கப் பெற்றவை. மற்றும், அவை உற்பத்தி செய்ததில் பாதி மின்சாரம் தான அளித்தன. எஞ்சிய பாதி அளவு மின்சாரம் சுழற்சியில் செலவழிந்து வந்தது. 1879-ம் வருடம் புரட்சி கரமான மின்சார உற்பத்திக் கருவியைக் கண்டு பிடித்திருப் பதாக எடிசன் அறிவித்த போது, விஞ்ஞான உலகம் அத்தகவலை நம்பவில்லை. ஆனால் எடிசனின் அந்த கண்டு பிடிப்பின் பல அம் சங்களை இன்றும் கூட மின்சார உற்பத்திக் கருவிகளில் காணலாம்.

நியூயார்க்கின் கிழக்கு பகுதியிலுள்ள அந்த ஒரு சதுர மைல் விஸ்தீரண பிரதேசத்தில் பரீக்ஷார்த்தமாக விளக்குகளை நிர்மாணித் துக்காட்ட எடிசன் தயாரானர். பூமிக்கடியில் மின்சார கம்பிகளை நிலை நாட்டப் போவதாக அவர் அறிவித்த போது பத்திரிகைகள் ஓல மிட்டன. அப்போது நியூயார்க்கிலே பூமி மட்டத்துக்கு மேல் தந்தி, டெலிபோன் கம்பிகள் நிறைந்திருந்தன. மின்சாரக் கம்பி களைப் பூமிக்கு அடியில் நிர்மாணிப்பது பற்றி எவர் தான் கேள்விப் பட்டிருக்க முடியும்? அந்தக் கம்பிகள் நனைந்து, நாசமாகி, மின் சாரம் வெளிப்பட்டுப் பாதசாரிகளைத் தாக்கும் என்பது அவருக்குத் தெரிய வில்லையே எனப் பத்திரிகைகள் பதறின. இந்த வரட்டுக் கூச்சல்களைக் கேட்டு வாளா விருந்து விடாமல், தமது திட்டங்களை அமைதியாக அவர் அமல் நடத்தலானர்.

1881-ம் வருடத்திலே தெருக்களிலே முதல் தடவையாக மின் சார கம்பிகள் நிலை நாட்டப்பட்ட போது கை தேர்ந்த மின்சாரத் தொழிலாளர்கள் வெகு சிலரே இருந்தனர். எனவே, எடிசன் பயிற்சிப் பள்ளிக்கூட மொன்று ஆரம்பித்தார். அவரது ஆராய்ச்சிக் கூட சிப்பந்திகளே பாடசாலையில் போதகர்களாகப் பணியாற்றினர். வீடுகளுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கும் முறை, டைன மோக்களை இணைப்பது முதலிய விவரங்களை விளக்கிப் பாட புத்தக மும் அவர் வெளியிட்டார். கோடைக்கால முடிவுக்குள் தெருக் களிலே கம்பங்களை நாட்டி வீடுகளிலே கம்பிகளை நிர்மாணிப்பதில் ஆயிரத்து ஐந்நூறு பேர் ஈடு பட்டிருந்தனர். கனத்த டைனமோ பாகங்களைத் தயாரிக்க விசேஷ தொழிற்சாலை யொன்று ஏற்படுத் தினர். மின்சார விளக்குகள் செய்ய ஒரு இயந்திரமும் ஸ்விச்சுகள் மீட்டர்கள் முதலிய மின்சாரத் தொழிக்குத் தேவையான எல்லாக் கருவிகளையும் தயாரிக்க மற்றொரு இயந்திரமும் நிர்மாணிக்கப் பட்டது.

(தொடரும்)

அரும் பெரும் தியாக மேதை

கும்மிடிபூண்டி· ப. தா. ஷாஹுல் ஹமீத்.

படம்: மகாதேவி. இசை: மானம் ஒன்றே பெரிதெனக் கொண்டு...

(பல்லவி)

1 நாயனின் உரையை கனவிலே கண்டு
நபி இபுறுஹீம் தம்மகனை
நாடியே குர்பான் செய்திடத்துணிந்தார்
ஈதுல் அல்ஹாவெனும் திருநாளில் (நாய)

(தொகையரு)

2 ஏகனின் கட்டளையை இபுறுஹீம் நபிதமது
இன்னுயிர்ப்பாலகர் இஸ்மாயிலிடம் உரைத்தார்
இறையோனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தே இஸ்மாயில்
குறைவற்றமகிழ்வோடு தன்னை குர்பானிச் செய்க வென்றார்

(பல்லவி)

3 அன்புள்ள தந்தையின் வாக்கினைக் கேட்டு
அருமைக்குமாரர் இஸ்மாயில்
அல்லாஹுக்காக தனை பலிகொடுக்கவே
ஆனந்தமுடனே மனம் இசைந்தார்

(தொகையரு)

4 பாலகரை இபுறுஹீம் படுக்க வைத்தார்
பளபளக்கும் கத்தியை கழுத்தில் வைத்தார்.
பாசத்தால் அவர்கள் மனம் பதறவில்லை!
பரிசுத்த உள்ளத்தில் பக்திக்கோர் எல்லையில்லை

(பல்லவி)

5 ஏற்றுக்கொள் இறைவா எனது பலியினை
என்றேவுரைத்தார் இபுறுஹீம்
அல்லாஹு அக்பர் என்று கூறியே
அழுத்தினார் கத்தியை பலமாக

(தொகையரு)

6 பலமாக அழுத்தியே அறுத்தபோதும்
பாலகரின் கழுத்தணுவும் அறுபடவே இல்லை
இதைக்கண்டு இபுறுஹீம் மனம் வெகுண்டு
இடர்செய்த கத்தியை வீசியெறிந்தார்

7 பளபளக்கும் கத்தியோர் பாறைமேல் பட்டிடவே
பாறையும் பலநூறு சுக்கலாய் சிதறிற்றப்போ
வானிலிருந்தே ஓர்குரல் வந்ததப்போ
வல்லவன் இபுருஹீமே என்றழைத்தான்

(பல்லவி)

8 "இபுருஹீமே உமது பலியினை
ஏற்றுக்கொண்டோம் நாம் மெய்யாக
உமது புதல்வரை நீரே அறுத்தீர்
உண்மையில் நீர் வெற்றிப் பெற்று விட்டீர்

9 உமது புதல்வர்க்கு பதிலாய் இந்த
ஆட்டினையே குர்பானிச் செய்யும்
என்றே இறைவன் மொழிந்திட்டபோதே
இறங்கிற்று சுவனத்தின் ஆடொன்று

(தொகையரு)

10 வானிலிருந்தே இறங்கிய ஆட்டினை
வள்ளல்நபி இபுருஹீம் அன்றே
வாகாய் அறுத்து குர்பானிச் செய்தார்
வல்லவனின் பேருளை அடைந்தார்

11 ஆருயிரினும் இனியதம் அருமை மகனை
அளவற்றமகிழ்வுடன் பலியிடத்துணிந்த
அண்ணல் நபி இபுருஹீம் எல்லாம் வல்ல
ஆண்டவனின் சோதனையில் வெற்றிப் பெற்றார்.

(பல்லவி)

12 அரும்பெருந்தியாக மேதையாய் விளங்கும்
அண்ணல் நபி இபுருஹீமின்
அடிச்சுவட்டினையே பின்பற்றி நாமும்
அல்லாஹுக்காக அனுதினமும்

13 ஆவியுடல் பொருள் அனைத்தையும் ஒருங்கே
அண்ணல் நபி சொன்ன பாதையிலே
அர்ப்பணித்தே பெரும் தியாகங்கள் செய்வோம்
ஆண்டவன் அருளை அடைந்திடுவோம். (காய)

187025

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

அன்வாருல் குர்ஆன்

1-வது ஒளி

அம்மயத் ஜுஸுவின் தர்ஜுமா

இந்த புஸ்தகத்தில் அம்மயத் ஜுஸுவில் உள்ள எல்லா ஸூருக்களேயும் தர்ஜுமா செய்யப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஆயத்தையும் முதலில் அரபியில் போட்டோ பிளாக் கைக்கொண்டு அச்சிடப்பட்டு, அதை யடுத்து அதற்கு தமிழில் உச்சரிப்பு காயிதாவுடன் போடப்பட்டு, அதனே யடுத்து அந்த ஆயத்தின் பொருளை சுத்தத் தமிழில் போடப் பட்டுஇருக்கின்றன. இந்த புத்தகம் அம்மயத் ஜுஸுவி லுள்ள ஒவ்வொரு ஆயத்திற்கும் பொருளை அறிந்துகொள்ள உதவுவதுடன் அரபியே தெரியாதவர்கள் அம்மயத்ஜுஸுவி லுள்ள எந்த ஸூருவையும் ஓத தெரிந்து கொள்ள உதவும்.

விலை ரூ. 0-80

2-வது ஒளி

ஸூறத்து யாஸீன் தர்ஜுமா

இந்த புஸ்தகத்தில் ஸூறத்து யாஸீனில் உள்ள ஒவ்வொரு ஆயத்தையும் 1-வது ஒளியைப் போலவே தமிழ் உச்சரிப்புடன் தர்ஜுமா செய்யப்பட்டிருக்கின்றது.

விலை நயா பைசா. 52

3-வது ஒளி

ஸூறத்து தபாறக் தர்ஜுமா

இதில் தபாரக் ஸூருவில் உள்ள ஆயத்துகளை ஆயத்து ஆயத்தாக போட்டோ பிளாக்கில் போடப்பட்டு அவைகளுக்கு கீழ் அந்த ஆயத்துகளுக்கு உச்சரிப்பும் தர்ஜுமாவும் தமிழில் போடப்பட்டுள்ளது. இதன் விலை நயா பைசா. 28

ஷை மூன்று ஒளிகளும் சேர்ந்து கலிகோ பைண்டு

விலை. ரூ. 1-60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5

கஸஸுல் அன்பியா

நபிமார்களுடைய சரித்திரங்கள் அடங்கியது

இதில் முதலாவது அல்லாஹு தஆலா ஆதியாய் படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாரூத் மாரூத் தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹ் அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமாதென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், 10-வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யஃகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸுப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷுஜபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிலுறு அலைஹிஸ்ஸலாம், 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸஉ அலைஹிஸ்ஸலாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுஸு அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம், 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம் ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கியிருக்கின்றன. இந்தக் கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப் பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்க வேண்டியது அவசியம்.

கலிகோ பைண்டு விலை ரூ. 9—60

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அம்பியா-பீ-கஸஸுல் அன்பியா முதற் பாகம் றப்பு கலிகோ பைண்டு ரூ. 6—00

ஷை இரண்டாவது பாகம் ரூ. 7—00

ஷை மூன்றாவது பாகம் ரூ. 5—00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.